# மதுரையில் ஆட்டிசம் ஞாயிறு அனுசரிப்பு

● உயர் நீதிமன்ற நீதிபதி பங்கேற்பு

■ மதுரை

மதுரையில் ஆட்டிசம் ஞாயிறு தினத்தை ஒட்டி ஆட்டிசம் குறைபாடுடைய குழந்தைகளுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

ஆட்டிசம் குறைபாடு மற்றும் ஆஸ்பெர்ஜர் சின்ட்ரோம் குறை பாடு உள்ளவர்களுக்காக உலகம் முழுவதும் பிப்ரவரி 2-வது ஞாயிற்றுக்கிழமை ஆட்டிசம் ஞாயிறு அனுசரிக்கப்படுகிறது. மதுரையில் ஜேசுசபை அந்தோனிராஜ் நினைவு பல்திறன் உயர் ஆராய்ச்சி மற்றும் மறு வாழ்வு கல்வி மையத்தில் (ஜெய்கேர்) ஆட்டிசம் ஞாயிறு நேற்று அனுசரிக்கப்பட்டது.

இதில் உயர் நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். ஆட்டிசம் குறைபாடு கொண்ட குழந்தைகளுக்கு மாறுவேடப் போட்டி, ஓவியப்போட்டி, பாடல் போட்டிகள் நடத்தப்பட்டன. இவர்களுக்கு செயின்ட் மேரீஸ் மேல்நிலைப் பள்ளி முதல்வர், பங்கு தந்தை ரெவரண்ட் எஸ்.மரிய நாதன், டிவிஎஸ் பள்ளி முதல்வர் டாக்டர் எஸ்.எஸ்.சுந்தரவள்ளி ஆகியோர் பரிசுகளை வழங்கினர்.

குழந்தை நரம்பியல் மருத்துவரும், கென்மாக்ஸ் ஒருங்கிணைந்த சிறப்புப் பள்ளி நிறுவனருமான கே.ராகவன் பேசுகையில், குழந்தைகளுக்கு ஏற்படும் ஆட்டிசத்தை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உரிய மருத்துவ சிகிச்சை அளித்தால் அவர்கள் விரைவில் குணமடைந்து சிறப்பாக செயல்பட முடியும். என்றார்.

காணொலி மூலமாக அமெரிக்கா, பிரிட்டன் மொரீஷியஸ், ஜப்பான், இலங்கையை சேர்ந்தவர்கள் பங்கேற்ற சர்வதேச அளவிலான கலந்துரையாடலும் நடைபெற்றது.



▲ மதுரையில் ஆட்டிசம் ஞாயிறு தின போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர் களுக்கு பரிசு வழங்கிய உயர் நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன்.